இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டால் யுத்தப் பிரச்சினை தானாகத் தீரும்

இதயன்

ஆசிரியர் தலையங்கம்

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காண்பதற்கான வாய்ப்பான சூழலை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே இராணுவ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்ற இலங்கை அரசின் வாதத்தை சர்வதேச யூரிகள் ஆணைக் குழு அடியோடு நிராகரித்திருக்கின்றது.

தனது இராணுவ நடவடிக்கைத் திட்டத்தை நியாயப்படுத்துவதற்கு இலங்கை அரசு முன் வைத்துள்ள இக்கருத்து ஏற்கப்படமுடியாதது என்று கூறியுள்ள ஆணைக்குழு, அரசியல்தீர்வை நாடும் நடவடிக்கைகள்தான் முதலில் ஆரம்பிக்கப் படவேண்டும், அதுதான் அவசியமானதும் அவசர மானதும் என்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இலங்கை இனப்பிரச்சினையின் பின்னணியை ஆராய்வோர், தமது இராணுவ வெறிப்போக்குத் திட்டத்தை நியாயப்படுத்தும் வகையில் இலங்கை யின் தற்போதைய அரசு கூறும் கருத்துகள் அடிப்படை ஏதுமற்றவை என்பதை வெளிப்படை யாகவே புரிந்துகொள்வர்.

இலங்கையின் ஆட்சி அதிகாரம் பிரிட்டிஷ் காலனித்துவவாதிகளிடமிருந்து இலங்கைத் தீவின் பெரும்பான்மையினரான சிங்கள, பௌத்தர் களிடம் கையளிக்கப்பட்ட நாள் தொட்டே இங்கு இனப்பிரச்சினையும் ஒரு சிக்கலாக உருவெடுக்க ஆரம்பித்துவிட்டது. அதிகாரத்தைக் கையிலெடுத்த தென்னிலங்கைச் சக்திகள் பேரினவாத நோக் கிலும் அதன் அடிப்படையில் அமைந்த மேலாண் மைப் போக்கிலும் விடயங்களைக் கையாண்டு, சிறுபான்மை இனத்தவர்களை அடக்கி, ஒடுக்கி, எதேச்சாதிகாரத்தை அவர்கள் மீது திணித்ததால் இலங்கை இனப்பிரச்சினை மிக மோசமான வடிவத்தை எடுத்தது.

அடக்கப்பட்ட சிறுபான்மையினர் குறிப்பாகத் தமிழ் பேசும் மக்கள் தங்களின் நியாயமான உரிமைகளுக்காகவும், கௌரவ வாழ்வு வேண்டியும் பேரினவாத ஆட்சி அதிகாரத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

ஆரம்பத்தில் அஹிம்சை நெறியில் சாத்வீக முறையில் காந்தீய வழியில் தமிழர்களின் போராட்டங்கள் அமைந்திருந்தன. குந்துமறியல், உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம், சட்டமறுப்பு என்று அறவழிப்பட்ட முறையில் தங்கள் உரிமை கோரி நியாயத்துடன் அவர்கள் நடத்திய போராட்டங்கள் சிங்கள ஆட்சியாளர்களால் பலாத்கார முறையில் படைப்பலம் கொண்டு வலோற்காரமாக அடக்கப்பட்டன. நீதிவேண்டி நியாயத்துடன் ஈழத் தமிழர்கள் சுமார் முப்பது ஆண்டு காலம் மூன்று தசாப்தங்கள் நடத்திய போராட்டங்கள் ஆயுத முனையில் சிங்கள ஆட்சியாளர்களால் பலவந்தமாக முறியடிக்கப் பட்டன. நியாயத்துக்காகத் தமிழர்கள் நேரிய முறையில் எழுப்பிய குரல் செவிமடுக்கப் படவில்லை.

அதனால்தான் வேறு வழியின்றி சுமார் முப்பது வருடகால பட்டறிவின் விளைவாக தமக்கு நீதி தேடி ஆயுதங்களைத் தூக்க வேண்டியவர்களானார்கள் தமிழர்கள்.

இதுவரை காலமும் அஹிம்சை வழியில் போராடிக் களைத்த தமிழர்களின் மிதவாதத் தலைவர்கள் கூட, தங்களது அறவழிப்பட்ட போராட்ட முயற்சி சிங்களத் தலைமைகளைப் பொறுத்தவரை 'புறக்குடத்து நீராக' 'செவிடன் காதில் ஊதிய சங்காக' வீணாகிப் பேகின்றது என்பதை நன்கு உணர்ந்த பின்புதான் இன்று ஆயுதப் போராட்ட சக்திகளின் பின்னால் அணிவகுத்து நின்றாவது நியாயத்தைப் பெற முயல்வோம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

ஆக, இனப்பிரச்சினையின் வழித்தோன்றலாக விளைவாக தோற்றியதுதான் ஆயுதப் போராட்டமே தவிர, நியாயமான உரிமைகளைக் கேட்டுத் தமிழர்கள் நடத்தும் ஆயுதப் போராட்டத்தால் எழுந்தது அல்ல இனப்பிரச்சினை.

இன்னும் விளக்கமாகச் சொல்வதானால் இனப் பிரச்சினை என்ற நோயின் குணங்குறியாக வெளிப் பாடாக தோற்றுவதுதான் ஆயுதப் போராட்டம்.

ஆகவே, சிகிச்சை நோய்க்குத்தான் அளிக்கப்பட வேண்டும். நோயின் குணங்குறிக்கு அல்ல. நோய்க்கு சிகிச்சை அளித்து நோயை சுகப்படுத் தினால், அந்த நோயின் வெளிப்பாடாகத் தோற்றும் உபாதைகளும் அடங்கிவிடும். மாறாக, உபாதை களுக்கு சிகிச்சை அளிப்பதன் மூலம் நோயை நீக்கிவிட முடியாது. அப்படிச் செய்ய முயன்றால், ஒரு வடிவத்தில் வரும் உபாதை அடங்கலாம். ஆனால் நோய் மாறாததால் அதன் உபாதை இன்னொரு வடிவத்தில் வெளிப்படும்? புதிதாகப் பிறப்பெடுக்கும். அது தவிர்க்க முடியாதது.

எனவே, மூலநோயான இனப்பிரச்சினைக்கு நியாயத்தீர்வு காண்பதுதான் முதலில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையாகும். அது சரியாக நிறைவேற்றப்படுமானால் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான அமைதித் தீர்வு எட்டப்படுமானால் தமிழர்களின் ஆயுதப் போராட்டப் பிரச்சினையும் தானாகவே தீர்ந்து விடும் அடங்கிப் போய்விடும்.

ஆனால், தமிழர்களுக்கு சிறுபான்மையினருக்கு நீதி, நியாயமான, ஏற்றுக்கொள்ளத்தக்க அரசியல் தீர்வு ஒன்றை வழங்கும் நேர்மையான எண்ணமோ,தெளிவான திடசங்கற்பமோ, கொள்கைப் பற்றுறுதியோ, தீர்க்கதரிசன சிந்தனை யோ தென்னிலங்கை ஆட்சிப்பீடத்துக்கு இல்லை.

(தொடர்ச்சி 29ம் பக்கம்)

மாவீரனே மகத்தான நாயகனே தானைத் தலைவனின் தகுதிகாண் தளபதியே போய் வா.. வேறு என்ன புகல்?

Obituary:

AT Moorthy: A Sri Lankan diplomat, he resigned his post over Tamil conflict

Tom Farrell

The Guardian

This article appeared in the Guardian on Monday May 19 2008 on p32 of the Obituaries section. It was last updated at 00:01 on May 19 2008. In 1981 Arambamoorthy Thedchana "AT" Moorthy, who has died aged 79, became high commissioner for Sri Lanka to the Court of St James, a post normally reserved for senior politicians. That same year, Sinhalese thugs burnt down the Jaffna municipal library, one of the largest in Asia, with the apparent connivance of the police, destroying more than 97,000 Tamil volumes. Moorthy, who came from a Tamil background, believed in a common Sri Lankan identity and resisted the ethnocentric politics that would tear his island nation apart. Yet, in May 1983, a state of emergency was declared and that July, following the massacre of an army patrol in Jaffna, anti-Tamil riots erupted across Sri Lanka, killing hundreds of Tamils and forcing thousands abroad.

Moorthy knew that his position had become untenable. He belonged to a generation whose politics had not been corrupted by narrow, murderous nationalism. In early 1984, with the Tamil Tigers' remorseless campaign underway, he stepped down as high commissioner. He had refused to declare that his position was evidence that no serious discrimination existed against Sri Lanka's Tamil minority. Thus ended a career that could probably have culminated with a United Nations post.

Yet when he graduated in economics from the then University of Ceylon in 1948 - the year of independence from Britain - educated Ceylonese of Moorthy's generation did not define themselves along ethnic or religious lines. Having avoided the bloody birth pangs experienced by India, there was every reason to believe that Ceylon - which became Sri Lanka in 1972 - could be a model for newly independent nations. And if he refused to be defined by racial allegiances at home, on the world stage Moorthy was determined that his country would not be defined by cold war ideological allegiances.

Moorthy was born in the eastern Batticaloa district, an area of the island mainly populated by Tamils, a predominantly Hindu minority, making up around 10% of the population. Having completed his primary education at the Sivananda Vidyalayam national school in Batticaloa, and Jaffna college, he moved to the capital, Colombo, and the university, in the 1940s.

Moorthy entered the foreign service in 1953, a year before the Colombo conference at which India's prime minister, Jawaharlal Nehru, laid out the principles of non-alignment supported by many newly independent nations. His first diplomatic posting to Jakarta, Indonesia, coincided with the 1955 Bandung conference, hosted by the President Sukarno with the aim of promoting Afro-Asian economic and political co-operation and opposing colonialism.

In 1957 he became chargé d'affaires to Beijing, meeting such leaders as Mao Zedong and Zhou En-Lai. Bilateral trade and economic agreements with China were integral to the policies being pursued by Sirimavo Banadaranaike, the world's first female prime minister, and Moorthy made many friends among the Beijing diplomatic community, including the British chargé d'affaires Sir Duncan Wilson. In 1959, he married Suseela, the daughter of a supreme court judge.

From 1961 to 1963 he served as first secretary in London - and he and Suseela also studied for the bar at Gray's Inn, being called in 1965. He then served as first secretary in West Germany (1964-66) and as chargé d'affaires in Thailand (1969-70) and also permanent representative to the Economic Commission for Asia and the far east. In 1970, he was posted as chargé d'affaires to Iraq, shortly after the revolution.

In 1974, Moorthy returned to Colombo to help coordinate the fifth non-aligned summit, held two years later, Bandaranaike having become chair of the non-aligned movement. But by now, the island's ethnic fault lines were fraying at the edges, since Bandaranaike had continued the populist policies of her husband Solomon, assassinated in 1959, designed to appeal to chauvinistic impulses among the island's Sinhalese Buddhist majority, who made up around 80% of the population. Bandaranaike's government fell in 1977, but her successor Junius Jayawardene took an even harder line against Tamil militancy. His pro-western foreign policy antagonised New Delhi to the extent that India began arming and training guerrilla groups such as the Tamil Tigers.

In 1978 Moorthy was posted as ambassador to Pakistan, concurrent with Iran. In the aftermath of the 1979 revolution, he played a key role in Sri Lankan government efforts to free US hostages in Iran, one of several special missions during his diplomatic career. Then came the appointment to London.

In the years that followed his resignation, he devoted himself to voluntary work and the upbringing of his three beloved grandchildren.

Having lived quietly in London for many years, he was deeply affected by Suseela's death in 2005. He is survived by his three children and three grandchildren.

•Arambamoorthy Thedchana Moorthy, diplomat, born August 10 1928; died April 1 2008

ஒரு பேப்பர் ORU PAPER